## மாதந்தோறும் முதல் சனிக்கிழமை "சன்மார்க்க சொற்பொழிவு"

16



சென்னை வேளச்சேரி நித்ய தீப தருமச்சாலையில் மாதாந்திர சன்மார்க்க சொற்பொழிவில் சன்மார்க்கத்தின் முன்னோடி முபா அவர்களின் சன்மார்க்க மைந்தர் **மு.பா. பாபு** அவர்கள் **கைவிடமாட்டான் என்று ஊதூது சங்கே** என்ற தலைப்பில் 04.05.2019 அன்று உரையாற்றினார்

---

# அடுத்த மாத சன்மார்க்க சொற்பொழிவு

17


## நித்ய தீப தருமச்சாலையில்

## மாதந்தோறும் முதல் சனிக்கிழமை சத்சங்கம் (சொற்பொழிவு)

நாள் : 1.6.2019 (சனிக்கிழமை) / நேரம் : மாலை 6.00 மணி முதல்

தலைப்பு : "**அருட்பா அமுதம்**"

சொற்பொழிவாளர் : சன்மார்க்க சீலர் , ஆன்மநேய சகோதரர்
தயவுமிகு **அருட்பா அருணாசலம்** அவர்கள்
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்,
அரும்பார்த்தபுரம், புதுச்சேரி



இடம் : **நித்ய தீப தருமச்சாலை**
7/8, புத்தேரிக்கரைத் தெரு,
தண்டீஸ்வரம் கோவில் அருகில், வேளச்சேரி,
சென்னை - 600 042.
செல் : 9444073635 / 22442515 / 9789494009

**இகத்தினும் பரத்தினும் எனக்கிடர் சாராது**
**அகத்தினும் புறத்தினும் அமர்ந்த மெய்த்துணையே (1176)**

# நல்ல வார்த்தை

விடயநிலைகளை வெவ்வேறு திரைகளால் அடர்புற மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி அகவல் 827/828. வடலூர் ஞானசபையில் வள்ளல் பெருமானார் ஜோதி தரிசனத்தை தொடங்கிவைத்தார். அதில் 7 திரைகளின் விலக்கமும் அதன் விளக்கமும் அகவலில் கரைவின் மாமாயை முதல் கலப்புத் திரையால் (813 - 826) வரை எழுதித் தந்திருக்கிறார். பிறகு விடயநிலைகளை வெவ்வேறு திரைகளால் அடர்புற மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி (827 /828), தத்துவநிலைகளைத் தனித்தனித்திரையால் அத்திறமறைக்கும் அருட்பெருஞ்ஜோதி (829/830) என 7 திரைகட்கு அடுத்தாற்போல் மேலும் 2 திரைகள் மறைக்கின்றன என எழுதுகிறார். ஆனால் இந்த 2 திரைகள் ஞானசபையில் காணப்படவில்லை, விலக்கப்படவுமில்லை. அவைகள் எத்தன்மையதான திரைகள்? அது ஏன் ஞான சபையில் காட்டப்படவில்லை என்பதை பல சான்றோர்கள் ஊன்றிப்பார்த்து 7 திரை விலக்கம் காண்போர் இறைவனைக் காணும் உபாயத்தை அறியலாம். இவர்கள் கோன் கண்ட குடிகள் என்னும் நிலைக்கு உயரலாம். ஆனால் மேலும் சொல்லப்பட்ட விடநிலை, தத்துவநிலை என்னும் 2 திரைகளை விலக்குவோர் கோன் கொண்ட குடிகள் என்னும் அதீத நிலைக்கு உயர்வர் என்பதாக விடைகண்டனர். இது வள்ளலாருக்கு எப்படியெல்லாம் அனுபவமானது என்னில் விடய நிலை விஷயநிலை என்பது மண், பெண், பொன் என்னும் மூவாசை.. தேவை என்பது வேறு. ஆசை என்பது வேறு. எனவே உலகியலில் இருப்பவர்கள் தேவை என்பதற்கு எங்கே எல்லைக்கோடு போடுவது என இறுதிவரை தெரியாமல் இவைகளை விலக்க முடியாமல் உள்ளனர் என்பதே உண்மை. இதை எனக்கும் உனக்கும் இசைந்த பொருத்தம் என்ன பொருத்தமோ என்ற பாடலில் விடயக்காட்டில் ஓடித் திரிந்த வெள்ளை நாயினேன் என எழுதுகிறார்.மனம் என்பது மனிதனை நீசனாகவும், ஈசனாகவும் மாற்ற வல்லது. காரணம் ஒவ்வொரு மனதிலும் ஒரு கருப்பு நாயும், ஒரு வெள்ளை நாயும் இருப்பதாக கூறப்படுகிறது. கருப்பு நாய் என்பது இருட்டில் அடர்ந்த காட்டில் திரியும்போது அதை பிறர் பார்ப்பது கடினம். இது மனித மனத்தில் ஓடும் குணங்களான அழுக்காறு, வெகுளி, ஆசை, காமம், குரோதம், மோகம், மதம், மாற்சரியம் போன்ற தீமைகளால் ஆளப்படும். பிறருக்கு அது தெரியாது. அதன் விளைவுகள் அவனுக்கும் பிறருக்கும் தீமையே பயக்கும். இன்னொன்று வெள்ளை நாய். இது முற்றிலும் மாறான குணமுள்ளது. நன்றி, நேயம், எஜமான விசுவாசம், பாதுகாப்பு, துணை போன்ற தன்மையால் பிறர் உணரவும், அனுபவிக்கவும் முயற்சிக்கும். உதவியும் சமரசமும் காருண்யமும் வெளிப்படும். (எனவே தான் நாயினும் கடையேன் என்று பல அருளாளர்கள் - மணிவாசகர், வள்ளலார் போன்றவர்கள் பாடினர்.) எனவே அந்த வெள்ளை நாய், இந்த மண், பொன், பெண் மலிந்த (விஷயக்) காட்டில் திரிந்தாலும் அதற்கு இவைகளின் மீது இச்சை ஏற்படாது. இந்தக் காமம், வெகுளி, மயக்கம் என்பதை முப்பாழ் என்பர். முப்பாழும் தாண்டி வந்து அப்பாலே நின்றவர்க்கு இப்பார்வை கிடையாது என பாபநாசம் சிவன் என்பவர் பாடல் எழுதியுள்ளார். எனவே அருளாளர்களா-யிருப்பவர்கள் இந்த விஷயக் காட்டில் எவ்வளவு ஓடினாலும் திரிந்தாலும் அவை மூன்றும் தெரியாது. வள்ளலார் என்னும் அருட்பிரகாசரும் இதே பாடலில் காமம், வெகுளி, மயக்கம் தாண்டினேன் என்கிறார். எப்படி பத்து கிலோமீட்டர் உயரத்தில் பறக்கும் விமானப் பயணி தரையில் ஓடும் ஆடு மாடுகளைப் பார்க்காமல் தாண்டிப் பறக்கிறாரோ அதைப் போல தானும் இவ்விஷயத்தை தாண்டினேன் என்கிறார்.

தத்துவ நிலை தத்துவங்கள் 96, ஆனால் உரைநடையில் உலகெலாம் என்னும் மெய்ப்பொருள் விளக்கத்தில் இன்னும் அனாதி தத்துவங்கள் 7 ஐச் சேர்த்து 103 தத்துவங்களாகக் காட்டுவது அற்புதம். அதுவுமன்றி தாத்விகம் (தந்திர நியாயத்திற்கு உரியது - உபாயங்களை தெரிவிக்கும் வல்லமையுள்ளது) போன்ற பிறவும் எழுதுகிறார். பிறகு அட்டகத்தில் தத்துவம் அனைத்தும் தனித்தனி கடந்தேம் என்றும் யாமும் எம் உணர்வும் ஒருங்குறக் கரைந்து போயினம் என்று அத்தகை உணர்ந்தோர் வழுத்த நின்றோங்கும் அருட்பெருஞ்ஜோதி என்னரசே எனும்போது அந்த உணர்வு என்பது கண்டு கொண்டேன், கனிந்து கொண்டேன், கலந்து கொண்டேன் என்பாரே அந்த நிலைதான் கோன் கொண்டகுடி நிலை. எனவே 7 திரைகள் விலக்கம் என்பது இறைவனை அறிதல், உணர்தல், நெகிழ்தல், நிறைதல், ஏற்றுதல், போற்றுதல், தரிசித்தலாம். எனவே நாம் கோன் கண்ட குடியாதலாம் விடயநிலை விலக்கினால் இறையனுபவம் பெறலாம் - அதன் சுவையறிதலாம். தத்துவநிலை விலக்கினால் இறைவனுடன் கலக்கலாம். அம்மயமாகி கோன் கொண்ட குடியாதலாம். இப்போது நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்பதை பிறர் சொல்லியறியத் தேவையில்லை. அது நமக்கே தெரியும். அதை மூலதனமாக்கி, முயற்சி செய்து, பயிற்சி பெற்று, வளர்ச்சியடைவதற்கான வழியைக் காட்டுகிறது வள்ளலார் நமக்குச் சொன்ன இந்த நல்ல வார்த்தை !



**K.N. உமாபதி**
K.K. நகர், சென்னை
95518 49757

**அயர்வற எனக்கே அருள்துணை யாகிஎன்
உயிரினும் சிறந்த ஒருமை என் நட்பே (1178)**

# கல்விச் சேவையில் 10-ம் ஆண்டில்

சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டையின் சார்பில் ஆண்டுதோறும் கல்வி உதவியாக இதுவரை 881 ஏழை எளிய மாணவச்செல்வங்களுக்கு ரூ. 49,00,000/- க்கும் ( 1/2 கோடி) மேலாக கல்வி உதவித்தொகை வழங்கி உள்ளது.

# ஓர் ஏழை மாணவனின் கல்விக்கு உதவிட வேண்டுமா?

தற்போது 2019-20-ம் கல்வி ஆண்டிற்கு தமிழகம் முழுவதும் இருந்து படிப்பில் நன்றாக தேர்ச்சி பெற்ற கிராமப்புற ஏழை-எளிய மாணவச்செல்வங்கள் விண்ணப்பித்துள்ளனர். இந்த ஆண்டும் படிப்பில் நன்றாக தேர்ச்சி பெற்ற கிராமப்புற ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவி வழங்க திருவுள்ளம் கொண்டுள்ளோம். தயா உள்ளம் கொண்ட ஆன்மநேய உள்ளங்களே தாங்களும் பங்கு பெற்று, ஓர் ஏழை மாணவனின் எதிர்கால வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு கல்வி உதவியை வாரி வழங்கிட வேண்டுமாய் தங்களை அன்புடன் வேண்டி விண்ணப்பிக்கின்றோம்.

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

Donations may be sent by crossed cheque to :

**Deepam Trust**

No. 30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042.

**For Bank Transfer**

**State Bank of India, IIT Branch, DEEPAM TRUST**

**Current A/c. No. : 30265475129 / IFSC Code : SBIN0001055**




**கல்லாதோர் இல்லா பாரதம் படைப்போம்**
**கற்றோர் நெஞ்சம் நிமிரச் செய்வோம்**

இங்ஙனம்
**நிர்வாகிகள்** மற்றும் **அறங்காவலர்கள்**
**தீபம் அறக்கட்டளை.**

**அன்பினில் கலந்து எனதறிவினில் பயின்றே**
**இன்பினில் அளைந்தஎன் இன்னுயிர் நட்பே (1180)**
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

## மகிழ்ச்சியுடன் வாழும் வழி !

மகிழ்ச்சியுடன் வாழும் வழியைத் தெரிந்து கொள்வோம்.! உலகில் உள்ள மனிதர்கள் அனைவரும் மகிழ்ச்சியைத்தான் விரும்புகிறார்கள், விரும்புவார்கள்.

துன்பத்தை எவரும் விரும்புவதில்லை. தீதும் நன்றும் பிறர்தர வாரா! என்பது முன்னோர்கள் கண்ட உண்மை.

மகிழ்ச்சியும் துன்பமும் தானாக வருவதில்லை. அவரவர்கள் செய்யும் செய்கையினால் தான் நன்மை தீமை உண்டாகின்றது.

எல்லாவற்றிலும் பெரிய துன்பம் மரணம் மட்டுமே !

எல்லாத் துன்பங்களிலும் மிகப்பெரிய துன்பம் மரணம் என்பது உலகமே அறிந்துள்ள விஷயம். மரணம் என்பது பெரிய பிணி என்கிறார் வள்ளலார். அந்த பெரிய பெரும் பிணியை போக்கும் மருந்தை கண்டுபிடித்தவர் வள்ளலார். மரணப் பெரும்பிணி வாரா வகைமிகு கரணப் பெருந்திரல் காட்டிய மருந்தே ! என்றும். உடற்பிணி அனைத்தையும் உயிர்ப்பிணி அனைத்தையும் அடர்ப்பறத் தவிர்த்த அருட்சிவ மருந்தே ! என்கிறார் வள்ளலார். உடற்பிணியால் தான் உயிர்ப்பிணி வருகின்றது.. உயிர்ப்பிணியால் ஆன்மாவானது உயிரையும் உடம்பையும் விட்டு வெளியே சென்று விடுகின்றது.

அதற்குப் பெயர் தான் மரணம் என்று பெயர் வைத்துள்ளார்கள். மரணத்தை எவரும் விரும்பி ஏற்றுக் கொள்வதில்லை. உலகியல் துன்பத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தற்கொலை செய்பவர்களும் உண்டு. வறுமையை ஏற்றுக் கொள்ள முடியாமல் தற்கொலை செய்பவர்களும் உண்டு. மேலும் தங்களால் தாங்கிக் கொள்ள முடியாமல் துன்பம் வருகின்ற போது தற்கொலை செய்து கொள்பவர்களும் உண்டு. உடல் மெலிந்தும் முதுமை அடைந்தும் செயல் இழந்தும், நோய்-வாய்ப்பட்டும், நோய் வராமலும் இறுதியில் மரணம் வந்து விடுகிறது. இவைகள் எல்லாமே மரணத்திற்கு பின் துன்பம் தீர்ந்துவிடும் என்பது அறியாமையாகும். மேலும் தற்கொலை செய்து கொண்டாலோ தீர்ந்து விடும் என்பது அறியாமையிலும் அறியாமையாகும்.

எந்த வகையில் மரணம் அடைந்தாலும் மீண்டும் பிறப்பு உண்டு என்பதை அறியாமல் செய்யும் தவறுகள் ஆகும்.

மனிதர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்குத்தான் மனிதப் பிறப்பு இறைவனால் கொடுக்கப்பட்டுள்ளன. உடற்பிணி உயிர்பிணி ! இரண்டுமே நோய் என்கிறார் வள்ளலார்.

உடற்பிணி உயிர்பிணி இந்த இரண்டு பிணிகளுமே துன்பத்திற்கு காரண காரியமாக உள்ளன. மரணத்திற்கும் இதுவே காரண காரியமாக உள்ளன. உடற்பிணியால் தான் உயிர்பிணி வருகின்றன. உடற்பிணி வரும்போது அந்த துன்பத்தை தாங்க முடியாமல் உயிர் பிரிந்துவிடுகின்றது. துன்பமே காரணம் ! மக்கள் மரணம் அடைவதற்கு காரணமே துன்பம் தான் என்பதை நாம் ஒவ்வொரு மனித ஜீவர்களும் அறிந்து கொள்ளவேண்டும்.

உடம்பையும் உயிரையும் காப்பாற்றத் தெரியாமல் மனிதர்கள் மரணம் அடைந்து விடுகிறார்கள். உலகில் தோன்றிய ஞானிகள் என்னும் அருளாளர்களும் மரணத்தை வெல்லும் வழியை சரியாக முறையாக தெரிந்து கொள்ளவில்லை. கற்றுக் கொள்ளவில்லை. ஆதலால் அருள் கிடைத்தும் அருள் பூரணம் அடையாமல், கிடைக்காமல் மரணம் வந்து மாண்டு போகிறார்கள்.

அருளால் மட்டுமே மரணத்தை வெல்ல முடியும். அறிவியல் வளர்ச்சியில் முன்னேறிய அறிவியல் வல்லுனர்களும், அணு ஆராய்ச்சியாளர்களும், அளவில் அடங்கா விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களும் இறைவனால் படைக்கப்பட்ட அணுக்களைக கொண்ட நிறைய அணுஆராய்ச்சிகள் கண்டுபிடிப்புகள் கண்டு பிடித்து அதிர்ச்சிக்கு உள்ளாகி இருக்கிறார்கள்.

இருந்தாலும் மனிதன் மரணத்தை வெல்லும் வழியை எவரும் கண்டுபிடிக்கவில்லை.மனித உடம்பின் அணுசேர்க்கையை அழிக்காமல் பிரித்து எடுக்கும் உளவை எவரும் கண்டுபிடிக்கவில்லை.

மரணத்தை வென்றவர் வள்ளலார் மட்டுமே! மரணத்தை வெல்லும் வழியைக் கண்டுபிடித்தவர் அருள் விஞ்ஞானி வள்ளலார் ஒருவர் மட்டுமே என்பது உலகம் அறிந்த உண்மையாகும். வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள், சாத்திரங்களிலும் சொல்லி இருக்கிறது என்று சிலர் சொல்வார்கள். அவைகள் எல்லாமே கற்பனை கதைகளே தவிர உண்மை அல்ல என்பதையும் வள்ளலார் தெரியப்படுத்தி உள்ளார்.

### வள்ளலார் பதிவு செய்துள்ள பாடல் !

வேதநெறி ஆகமத்தின் நெறி பவுராணங்கள்  
விளம்புநெறி இதிகாசம் விதித்த நெறிமுழுதும்  
ஓதுகின்ற சூது அனைத்தும் உளவு அனைத்தும் காட்டி  
உள்ளதனை உள்ளபடி உணர உணரத்தனையே  
ஏதமற உணர்ந்தனன் வீண்போது கழிப்பதற்கு ஓர்  
எள்ளளவும் எண்ணம் இலேன் என்னொடு நீ கலந்தே  
தீதறவே அனைத்தும் வல்ல சித்தாடல் புரிவாய்  
சித்த சிகாமணி என் திருநட நாயகனே ,,,,!

**நான் புரிவன எலாம்தான் புரிந்து எனக்கே**  
**வான் பதம் அளிக்க வாய்த்த நல்நட்பே (1182)**

என்கிறார். மேலும் வேதம் ஆகமங்கள் என்று வீண் வாதம் ஆடுகின்றீர்.

வேதாகமத்தின் விளைவு அறியீர் சூதாகச் சொன்னது அலால் உண்மை வெளி தோன்ற உரைக்க வில்லை என்ன பயனொ இவை என்கிறார். கற்பனைக் கதைகளை உருவாக்கி சூதாக உண்மைக்கு புறம்பான கற்பனைக் கதைகளை கற்பனைகளாக தோற்றுவித்து மக்களை அலைய விட்டுவிட்டார்கள்.

இதுசமயம் எல்லா உண்மைகளையும் ஒளிவு மறைவு இல்லாமல் எனக்கு உண்மை உணர்த்திவிட்டாய் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே ! என்கிறார் வள்ளலார்.

எனவே என்னுடைய ஆன்மநேய உடன் பிறப்புகளாகிய உங்களுக்கு உண்மையை உண்மையாக எடுத்து சொல்வதற்கு உண்மை அறிவை விளக்கி உள்ளாய். ஆதலால் உண்மை உரைக்கின்றேன் என்கின்றார் வள்ளலார்.

என்மார்க்கம் இறப்பை ஒழிக்கும் சன்மார்க்கம் என்று வெளிப்படுத்துகின்றார் ! இறைப்பை ஒழிப்பது சாத்தியமா? என்று எல்லோரும் வியக்கின்றார்கள். சாத்தியம் சத்தியம் என்று உணர்ந்து அறிந்து அனுபவித்து வாழ்ந்து மரணத்தை வென்றுதான் உலக மக்களுக்கு பறைசாற்றுகிறார்.

**சாகாக்கல்வி !**

வள்ளலார் கண்டுபிடித்த சுத்த சன்மார்க்க கொள்கைகளுக்கு சாகாக்கல்வி என்றே பெயர் சூட்டுகின்றார்.

இதுவரையில் பொருள் ஈட்டும் கல்விக்கு சாகும் கல்வி என்றும். நான் அருள் ஈட்டும் கல்வியைக் கற்றுத் தருகிறேன் அதற்கு சாகாக்கல்வி என்றும் பெயர் மாற்றம் செய்கின்றார்.

சாகாக்கல்விக்கு நான்கு மரபுகளை அதாவது நான்கு பாடங்களைச் சொல்லித் தருகின்றார். அதில் வெற்றி பெற்றால் மரணத்தை வென்று விடலாம் என்கிறார்...

வள்ளலார் பதிவு செய்துள்ள பாடல் !

சாகாத கல்வியே கல்வி
ஒன்றே சிவம் தான் என அறிந்த அறிவே தகும் அறிவு
மலம் ஐந்தும் வென்ற வென்ற வல்லபமே தனித்த பூரண வல்லபம்
வேகாத காலாதி கண்டுகொண்டு எப்பொருளும் விளைய
விளைவித்த தொழிலே மெய்த் தொழிலாகும்
இந்நான்கையும் ஒருங்கே வியந்து அடைந்து உலகம் எல்லாம்
மா காதல் உற எல்லாம் வல்ல சித்தாகி நிறைவான வரமே இன்பமாம்
மன்னும் இது நீ பெற்ற சுத்த சன்மார்க்கத்தின் மரபு என்று உரைத்த குருவே
தேகாதி மூன்றும் நான் தருமுன் அருள் செய்து எனைத்தேற்றி அருள் செய்த சிவமே
சபையின் நடுநின்ற ஒன்றான கடவுளே தெய்வ நடராஜபதியே !

என்ற பாடல் வாயிலாக சுத்த சன்மார்க்க மரபைப் பற்றித் தெளிவாக விளக்கி உள்ளார். சாகாத கல்வி கற்க வேண்டுமானால் ஒரே கடவுள் என்ற உண்மையும், அவரே அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என்ற உண்மையை அறிந்து கொள்பவரே ! சிறந்த உயர்ந்த உண்மை அறிவு பெற்றவர் ஆவார். அவரால் மட்டுமே ஐந்து மலங்களை வெல்ல முடியும். ஐந்து மலங்களை வென்றவர்களால் மட்டுமே வேகாத காலாகிய அமுதக் காற்றை சுவாசிக்க முடியும். அமுதக் காற்றை சுவாசிப்பவர்களால் மட்டுமே உடம்பில் உள்ள ஒன்பது துவாரங்களை அடைக்க முடியும்.

ஒன்பது துவாரங்களை அடைக்க கற்றுக் கொண்டவர்களால் மட்டுமே துரியமலை துவாரம் திறக்கப்படும். அதாவது தலையின் உச்சி (கபாலம்) திறக்கப்படும்.

உச்சி திறந்தால் மட்டுமே அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் மெய் அருள் கனல் ஆன்மாவைத் தொடர்பு கொள்ளும்.

மெய் அருள் கனலின் (சுத்த உஷ்ணம்) சூட்டினால் ஆன்மாவை மறைத்துக் கொண்டுள்ள திரைகள் ஒவ்வொன்றாக விலகிவிடும்.

திரைகள் நீங்கியவுடனே ஆன்ம ஒளியும் அருட்பெருஞ்ஜோதி ஒளியும் தொடர்பு கொள்ளும். ஆயிரத்தெட்டு கமல இதழ்களால் மூடிக்கொண்டு இருக்கும் ஆன்மாவானது இதழ்கள் விரிந்து மலர்ந்து அருட்பெருஞ்ஜோதியை அனைத்துக் கொள்ளும். அனைக்கின்ற போது உண்டாகும் அருள் சுகத்தை மகிழ்ச்சியை சொல்வதற்கு வார்த்தைகள் இல்லை என்கிறார்.

**அனுபவமாலையில் பதிவு செய்கின்றார் !**

கண்கலந்த கணவர் என்னை கை கலந்த தருணம் கண்டறியேன் என்னையும் என்கரணங்கள் தனையும்

எண்கலந்த போகம் எல்லாம் சிவபோகம் தனிலோர் இறையளவு என்று உரைக்கின்ற மறையளவின் றறிந்தேன்

விண் கலந்த திருவாளர் உயிர் கலந்த தருணம் வினைத் துயர் தீர்ந்து அடைந்த சுகத்தை நினைத்திடுந் தோறும் எல்லாம்

உண்கலந்த ஆனந்தப் பெரும் போகம் அப்போது உற்றது எனை விழுங்கக் கற்றது காண் தோழி ! என்னும் பாடல் வாயிலாக தன் அனுபவத்தை அனுபவமாலை என்னும் பதிகத்தின் மூலம் வெளிப்படுத்துகிறார் வள்ளல் பெருமான்.

மேலும் ஒரு பாடலிலே அருள் அமுதத்தை எப்படி அனுபவித்தேன் அகம் மகிழ்ந்தேன் என்பதை பதிவு செய்கின்றார் பாருங்கள்...

மாடமிசை யோங்கும் நிலா மண்டபத்தே எனது மனவாளர்

உள்ளமும் உணர்ச்சியும் உயிரும் கலந்துகொண்டு
எள்ளுறு நெய்யில் என்உள்ளூறும் நட்பே (1184)

**கொடுத்த திரு அருள் அமுதம் மகிழ்ந்தே**

**ஏடவிழ் பூங்குழலாய் நான் உண்ட தருணம் என்னையும் அறிந்திலேன் உலகம் தன்னையும் நான் அறியேன்**

**தேடரிய நறும்பாலும் தேம்பாகும் நெய்யும் தேனும் மொக்கக் கலந்தது எனச் செப்பினும் சாலாதே**

**ஊடறியாச் சுவை புகல என்றால் முடியாது தென்னடியோ அவ்வமுதம் பொன்னடி தானிகரே !**

மேலே கண்ட அனுபவமாலையில் தான் அடைந்த அருள் சுகத்தை இன்பத்தை மகிழ்ச்சியை சொல்வதற்கு வார்த்தைகளே இல்லை என்கிறார். எனவே சுத்த சன்மார்க்க சான்றோர்களே ! என்றும் அழியாமல் வாழ்கின்ற ஒப்பற்ற பெரிய வாழ்வை வாழ்வதற்கு இந்த மனித தேகமே தகுதி வாய்ந்தது. ஆதலால் நாம் அடைய வேண்டியது ஆன்மலாபம், ஆன்ம சுகம், ஆன்ம மகிழ்ச்சி என்பதாகும். ஆன்மா மகிழ்ச்சி அடைய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் தொடர்பு அவசியம்... அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை தொடர்பு கொள்ள எவைகள் எல்லாம் தடையாக இருக்கின்றதோ அவற்றை எல்லாம் விளக்கி அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை தொடர்பு கொண்டால் மட்டுமே அருள் கிடைக்கும். வேறு எந்த தெய்வத்தின் தொடர்பாலும் அருள் கிடைக்காது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எனவே தான் இயற்கை உண்மைக் கடவுள் அருட்பெருஞ்ஜோதி என்கிறார் வள்ளலார். அதற்கு இயற்கை உண்மை இயற்கை விளக்கம், இயற்கை இன்பம் என்று பெயர் சூட்டி விளக்குகின்றார்.

அந்த அருட்பெருஞ்ஜோதி அருள் கிடைத்தால் மட்டுமே மரணத்தை வென்று மகிழ்ச்சியுடன் வாழ்வாங்கு வாழலாம்..

**எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க !**
**கொல்லா நெறியே உலகம் எல்லாம் ஓங்குக !**



அன்புடன் ஆன்மநேயன்
**ஈரோடு கதிர்வேல்**
+91 9865939896


சென்னை வேளச்சேரி

## தீபம் அறக்கட்டளையின்
## வடலூர் சத்திய தருமச்சாலை சேவைப் பயணம்
### தொடர்ந்து 69 மாதங்களாக...

அன்பார்ந்த ஆன்மநேய உடன்பிறப்புக்களே!

சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் வடலூர் சத்திய தீப தருமச்சாலையில் மாதந்தோறும் ஜோதி (பூசம்) தரிசன நாளில் காய்கறி வெட்டுவதற்கும், சமையல் பணிக்கும் தீபத்தின்ஆடுகின்ற சேவடிகள் பங்கு பெறுகிறார்கள். வருகின்ற 07.06.2019 வெள்ளிக்கிழமை ஜோதி தரிசன நாளில் 69 வது மாத சேவைப்பயணம் நடைபெறுகிறது. அதுசமயம் 06.06.2019 வியாழன் இரவு சென்னை வேளச்சேரி நித்ய தீப தருமச்சாலையில் இருந்து **வேன்** புறப்படுகிறது. இலவச சேவைப்பயணம். அனைவரும் பங்கு பெற்று ஆன்மலாபம் அடைந்து இன்புற்று வாழ அன்புடன் அழைக்கின்றோம்.

**03.06.2019க்குள்**
**முன்பதிவு அவசியம்**
**கட்டணம் இல்லை**

மாத பூச நாள்
**07.06.2019 (வெள்ளி)**

வேன் புறப்படும் இடம்
**நித்ய தீப தருமச்சாலை**
வேளச்சேரி, சென்னை - 42.

புறப்படும் நாள் & நேரம்
**06.06.2019 / இரவு 9 மணி**

தொடர்புக்கு
ஆன்மநேயன் V. **பாரதி,** பொதுச்செயலாளர்
தீபம் அறக்கட்டளை, வேளச்சேரி, சென்னை - 600 042.
கைப்பேசி : 99410 35743 / 044-2244 2515


**செற்றமும் தீமையும் தீர்த்தநான் செய்த**
**குற்றமும் குணமாக கொண்ட என்நட்பே (1186)**

# சென்னை வேளச்சேரி நித்ய தீபம் தருமச்சாலையில் தினசரி நடைபெறும் பசியாற்றுவித்தலின் அற்புத காட்சி



அன்னம்பாலிக்கும் சேவை பொன்னம்பலமாக்கும் சேவை



குணங்குறி முதலிய குறித்திடாது எனையே
அணங்கறக் கலந்த அன்புடை நட்பே (1188)

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி



சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின்

# நித்ய தீப தருமச்சாலை

# அருட்பணி (கட்டிட) நிதி விண்ணப்பம்

ஆன்மநேய ஒருமைப்பாட்டுள்ளம் கொண்ட அன்பு சகோதர, சகோதரிகளுக்கு தீபம் அறக்கட்டளையின் பணிவான வந்தனங்கள் பல...

சென்னை வேளச்சேரியில் தற்போது உள்ள நித்ய தீப தருமச்சாலை கட்டிடமானது வாடகை / குத்தகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இன்னும் ஓரிரு மாதம் குத்தகை காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது. அருட்பெஞ்ஜோதி ஆண்டவர் பெருங்கருணையால் சென்னை வேளச்சேரியில் 1000 சதுர அடியில் ஓர் நிரந்தரமான இடம் அமைய தங்களிடம் விண்ணப்பித்து இருந்தோம்.

தீபத்தின் தருமச்சாலை கட்டிட நிதி கோரிக்கை ஏற்று நன்கொடையை அள்ளிக்கொடுத்த அருளாளர்களை வணங்கி மகிழ்கிறோம். கட்டிட வளர்ச்சிக்கு வேண்டிய பாதியளவு கருணை நிதி மட்டுமே வந்து இருப்பதால், இன்னும் பெருமளவு நிதி தேவைப்படுகிறது. இந்த விண்ணப்பத்தை கண்ணுறும் தயா உள்ளம் கொண்ட கொடைவள்ளல் பெருமக்களே, இந்த அருட்பணியில் தாங்களும் பாகம் பெற்று, உடனடியாக கருணை நிதியை வாரி வழங்கி கிடைப்பதற்கரிய அரிதான இந்த மானிடப்பிறவியின் பெரும்பயனை உணர்ந்து ஆன்ம லாபம் பெற்றுய்ய எல்லாம்வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் திருப்பாதம் பணிந்து வேண்டி தங்களிடம் விண்ணப்பிக்கின்றோம்.

இங்ஙனம்
**நிர்வாகிகள்,**
தீபம் அறக்கட்டளை
வேளச்சேரி, சென்னை

**பிணக்கும் பேதமும் பேயுல கோர்புகல்
கணக்குமட தீர்த்தெனைக் கலந்தநன் நட்பே (1190)**

# தருமச் சாலை கட்டிட அருட்பணிக்கு நிதி வாரி வழங்குவீர்




| | |
|---|---|
| 1 சதுர அடி நிலத்துடன் கட்டிட திருப்பணி | 10,000/- |
| 10 சதுர அடி நிலத்துடன் கட்டிட திருப்பணி | 1,00,000/- |

**1 லட்சம் ரூபாய்க்கு மேல் நன்கொடை அளிப்பவர்களின் பெயர் கல்வெட்டில் பொறிக்கப்படும்.**

***for Bank Transfer***

Bank / Branch : State Bank of India / IIT Branch
Current A/c. No. : 30265475129
IFSC : SBIN0001055

***By Crossed Cheque***

**DEEPAM TRUST**

#30, Dropathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042.
Mobile : 9444073635 | Phone : 044 - 22442515 | E-mail : admin@deepamtrust.org
Website : www.deepamtrust.org

**தாங்கள் அளிக்கின்ற நன்கொடைகளுக்கு 80G வருமானவரி விலக்கு உண்டு**

## தர்மம் தலை காக்கும் ! தக்க சமயத்தில் உயிர் காக்கும் !

என்ற அற்புதமான பொன்வரிகளுக்கு ஏற்ப தர்மம் செய்திடுவோர் அவர்களின் வருங்கால சந்ததியினரை காக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. தர்மமானது உண்மையான, சத்தியமான, நேர்மையான தமது சொந்த உழைப்பிலிருந்து வரக்கூடிய நிதியில் அளிப்பதாகவும். அப்படிப்பட்ட நிதியானது வறியவர்களின் பசிப்பிணியை போக்குவதற்கும், தர்ம சத்திரங்களை உருவாக்குவதற்கும் பயன்படுமானால், ஈரேழு ஜென்மத்தில் பீடித்திருக்கும் கர்மவினைகளும், பாவங்களும் நீக்கி பிறவி எனும் பெருங்கடலில் இருந்து கரையேறி இறைவனுடன் ஏக சொருபமாக இணைந்து மரணமில்லா பெருவாழ்வு பெற்று வாழ்வதற்கு முதல் படியாக அமையும்.

சித்தர்வாக்கு

**சவலை நெஞ்சகத்தின் தளர்ச்சியும் அச்சமும்
கவலையும் தவிர்த்தெனைக் கலந்தநன் நட்பே (1194)**

# நித்ய தீப தருமச்சாலை

**கடந்த 12 - ஆண்டுகளாக, தினசரி நூற்றுக்கணக்கான பசியால் வாடும் வறியவர்களுக்கு, 20 தருமச்சாலைகள் மூலம்**

## ஆயிரக்கணக்கானோருக்கு அன்னம்பாலிப்பு



**அன்னதான அறப்பணிக்கு அருட்கொடை தந்து நீங்களும் அருளின்பம் பெற அன்புடன் அழைக்கின்றோம்!**
**தங்கள் சக்திக்கேற்ப, விருப்பத்திற்கேற்ப அன்னம் தந்து மகிழலாம்!**

| | | | |
|---|---|---|---|
| காலையில் கஞ்சி வார்க்க | ரூ. 1,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 10,000/- |
| மதியம் உணவளிக்க | ரூ. 3,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 30,000/- |
| மதியம் சிறப்புணவு | ரூ. 5,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 50,000/- |
| ஒரு நாள் அன்னமளிக்க | ரூ. 6,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 60,000/- |
| 20 தருமச் சாலைகளிலும் அன்னமளிக்க | ரூ.20, 000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ.2,00,000/- |

**முன்பதிவிற்கு தொடர்பு கொள்ளவும் : 044 - 2244 2515 / 94440 73635**

Donations may be sent by crossed cheque to:

**DEEPAM TRUST**

#30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042.

**For Bank Transfer**

| | | |
|---|---|---|
| Bank / Branch | : | State Bank of India / IIT Branch |
| Current A/c. No. | : | 30265475129 |
| IFSC | : | SBIN0001055 |

வங்கி பரிமாற்ற தகவலை 9444073635 என்ற எண்ணிற்கு அவசியம் தெரிவிக்கவும்.

**களைப்பறிந் தெடுத்துக் கலக்கம் தவிர்த்தெனக்கு**
**இளைப்பறிந்து உதவிய என்னுயிர் உறவே (1194)**

# அருட்பெருஞ்சோதி அகவல்

அனுபவப் பொருள் விளக்கம்

திண்டுக்கல் சுவாமி சரவணானந்தா

## 36. சாக்கிராதீத வெளிநிறை சிற்சபை

71. சாக்கிராதீதத் தனிவெளி யாய்நிறை
72. வாக்கிய சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

(உ-வி.) முன்பு சாக்கிரம் என்னும் விழிப்புநிலை குறித்தும், துரியம், துரியாதீதம் குறித்தும் ஒருவாறு விளக்கப்பட்டன, இங்கு முதல் நிலையையும் ஈற்றுநிலையையும் இணைத்துக் கொண்டு விளங்குகின்ற ஓர் அனுபவ நிலையை உணர்த்துகின்றார் அருள் அடிகளார். சாக்கிரநிலையை எல்லோரும் அறிந்துள்ளனர். ஆனால் துரியாதீத நிலையை எல்லோரும் அறிவது எளிதல்ல. யோகஞான சாதகர்கள் ஒருவாறு அத் துரியாதீதத்தை அறிவர். மற்ற உலகியல் உபாய ஞானிகள் புத்தகப் படிப்பாலும், மனோ ஆராய்ச்சியாலும், உண்மையை அறிந்து கொள்ளாமலே, இத் துரியம், துரியாதீதம் குறித்து எவ்வளவோ பேசுவார்கள். ஆகையால், இவ்விருவகை அறிவுக்கும் அனுபவப்படாத இத் துரியாதீதத் தனிவெளிநிலை என்று உணரப்படுவதாம்.

மேற்படி சாக்கிராதீத அனுபவம் சித்திக்கப் பெறுவது எப்படி என்றால், நம் வள்ளல் கண்ட சுத்த சன்மார்க்கம் ஒன்றினால்தான் இவ்வனுபவம் ஏற்று வாழமுடியும் என்று அறிகின்றோம். இச் சுத்தநெறியோ, சத்விசாரத்தால் உண்மையைக் கண்டுகொண்டு, பரோபகார வாழ்வால் அனுபவத்துடன் விளங்கவும் கூடியதாய் இருக்கின்றதாம். இச் சன்மார்க்க சாதகன் தயாவொழுக்கத்தோடு இருந்துகொண்டு, கடவுளான்ம உண்மைகாண சத்விசாரம் செய்கின்றான். அப்போது திருவருளால், எங்கும் பூரணமாய் நிரம்பியுள்ள அருட்பெருஞ்ஜோதிபதியே, தன்னில் முதல் அணுவாய் வெளிப்பட்டு, தனது அகம்புறம் யாவுமாய்த் திகழ்கின்றதாய் அறிகின்றான். ஆனால், அந்த அருட்பெரும் பதியே இவனாய், இவனது உயிரும் உடம்புமாய் இருக்கக்கண்டு, அம் முதலணு நிலையே கடவுளாகவும் தானாகவும் அறிகின்றான். இந்நிலையே சிரநடு சிற்றம்பல நிறைவெளியாக இருக்கின்றதாம். சாக்கிரத்தில்தான் இந்தச் சிற்றம்பலத்தைக் கண்டுகொண்டுள்ளான் இச் சன்மார்க்கி. இவன் புறத்திருந்து கொண்டுதான், விசாரத்தால் இச்சிற்சபையைக் கண்டான். கண்டு, அதுவே தன்னுண்மைநிலை என்று தெளிவுபெற்று நிற்பவனாகிவிட்டுள்ளான். புறநெறியாளரோ புறத்திருந்து, அகத்திலுள்ள கடவுளான்மாவைக் கண்டும், தாம் அதுவெனப் பாவித்து நின்று, பாவனையின் முடிவில் உடலைவிட்டே உள்ளொன்றி மறைந்து போகின்றார்களாம்.

நம் சன்மார்க்கி சிற்சபையிலிருந்து சாக்கிரத்தும், சொப்பனத்தும், சுழுத்தியினும் வாழ்ந்து, விசாரசாதனை முதிர முதிர துரியம், துரியாதீதம் வரை சென்றுவிடுகின்றான். இத் துரியாதீதத்தில் இவன் கடவுளோடு ஒன்றி இருந்தும்கூட, தான் கெட்டு ஒழிந்துபோகாது, நிறையருளால், தான் அதுவாகி விளங்குகின்றான். இந்தத் துரியாதீத அனுபவம் இவனுக்கு இப்பொழுது விழிப்புநிலையிலும் நழுவாது விளங்குதல் உண்மையாம். இந்த சாக்கிரத்தில் துரியாதீத அனுபவநிலையையே சாக்கிராதீதம் ஆக மொழியப்படுகின்றது. இச்சாக்கிராதீத அனுபவத்தில் இவனது உள்ளுணர்வும் பிரபஞ்சவெளியெலாம் கடந்து ஒளிர்கின்றதாம். ஆகவே, நம் அருட்பெருஞ்ஜோதிச் சிற்சபை இந்தத் துரியாதீதத் தனிவெளியில் நிறைவாக்கிப் பெற்று என்றுந் திகழ்கின்றதாம். இதனால், சுத்த சன்மார்க்கி சிற்றம்பலத்தே நிறை இன்பவாழ்வோடு என்றென்றும் விளங்குதல் சத்தியம்.

எண்தகு சிற்றம்பலத்தே எந்தை அருள் அடைமின் இறவாத வரம்பெறலாம் இன்பமுறலாமே, என்று வாய்ப்பறை யார்க்கின்றார் வள்ளல் அருட்பிரகாசப் பெருமான்.

**தன்னைத் தழுவுறு தரஞ்சிறிது அறியா**
**என்னைத் தழுவிய என்னுயிர் உறவே (1196)**

**சென்னை வேளச்சேரியில் தீபம் அறக்கட்டளையின் கிளை தருமச்சாலைகளான தேவதானம் பேட்டை, பெரியக்குறிச்சி , கெங்கவரம் தருமச்சாலைகளில் நித்ய பசியாற்றுவிக்கப்படும் அற்புத காட்சி.**

தேவதானம் பேட்டை




பெரியக்குறிச்சி



கெங்கவரம்



**மனக்குறை நீக்கிநல் வாழ்வளித்து என்றும்**
**எனக்குறவு ஆகிய என்னுயிர் உறவே (1198)**

## சென்னை வேளச்சேரியில் தீபம் அறக்கட்டளை சார்பில் அரிசி மளிகைப் பொருட்கள் மற்றும் மருத்துவ உதவிகள் வழங்கப்பட்ட காட்சி









சென்னை வேளச்சேரியில் தீபம் அறக்கட்டளை சார்பில் திருவள்ளூர் மாவட்டம் ஈங்கூர் கிராமத்தை சேர்ந்த ஏழைப் பெண் **சாந்தி** அவர்களின் வாழ்வாதாரத்திற்காக **இஸ்திரிப் பெட்டி** வழங்கப்பட்ட காட்சி

**துன்னும் அனாதியே சூழ்ந்துஎனைப் பிரியாது**
**என்னுறவு ஆகிய என்னுயிர் உறவே (1200)**

# விரயங்கள்

விரயங்கள் வெகு விமரிசையாக அரங்கேறி வருவது மட்டுமன்றி, எண்ணிக்கையிலும் அதிவிரைவாக முன்னேற்றம் காண்பது அதிர்ச்சி அளிக்கின்றது. இதுபற்றிய சிந்தனை, தற்காலம் மிக அவசியத் தேவை என்கிற எனது உள்ளுணர்வின் வெளிப்பாடுதான் இந்தக் கட்டுரை.

விரயங்கள் பற்றி விமர்சிக்க துவங்கும் முன்னர், விரயங்களை அடையாளப்படுத்திக் கொள்ளுதல் அவசியம். அடையாளப்படுத்திட ஏதேனும் அளவை இருக்கிறதா?

**பயன் விளை செயற்பாடுகளை புறக்கணிப்பதும், பயனற்ற செயற்பாடுகளை, மிகுந்த ஆர்வத்தோடும் அர்ப்பணிப்போடும் கொண்டாடி மகிழ்வதுதான் விரயம்.**

இன்றைய தலையாய விரயம், மனிதவள விரயம். மனிதவளம் விரயமாகிறதா? என்ன உளறல் என்றோ, என்ன புதிர் போடுகிறீர் என்றோ வினவ விரும்புகிறீர்கள் அல்லவா?

சற்று விரிவாகவே எனது எண்ணங்களை சமர்ப்பிக்கின்றேன். ஒரு மனிதனுக்கு அளிக்கப்பட்டுள்ள மனவளம் - எண்ணுந்திறன் அரிதினும் அரிதானது. எண்ணுந்திறனால் எத்தனையோ உச்சங்களைத் தொடமுடியும். அளப்பரிய ஆற்றலை தனது உடமையாக்கிக் கொள்ள இயலும். திண்ணிய மனம் பெற்று எண்ணிய யாவும் எய்திடமுடியும்.

ஒரு மதிப்பீடு செய்து பார்ப்போமா? சுயமதிப்பீடு செய்து கொள்வது கடினம். நாம் செய்யத் தயங்குவதும் செய்து கொள்ளத் தவறுவதும் சுயமதிப்பீடுதான். ஆனால், நாம் அயலாரை மதிப்பீடு செய்வதில் பெருவிருப்பம் உள்ளவர்கள். உண்மைதானே?

ஆகவே, உங்களுக்கு நன்கு அறிமுகமான, ஒரு பத்துப் பேரை நினைவில் நிறுத்தி மதிப்பீடு செய்யுங்கள். உங்கள் மதிப்பீட்டில்,

அவர்களில் எத்தனை பேர் நிறைகுடம் - எத்தனை பேர் குணக்குன்று எத்தனை பேர் நேர்மையானவர்கள் - எத்தனை பேர் நல்லவர்கள் - வல்லவர்கள்???

உங்கள் உள்ளுணர்வின் மதிப்பீட்டில், அந்த பத்துப் பேருமே குணக்குன்றுகள் தான் என்று சொல்வீர்களானால், நீங்களே வணக்கத்துக்குரியவர். ஏனெனில், நீங்களே ஒரு நிறைகுடம் என்பதால் குறைகளே உங்கள் கண்களுக்குத் தெரியவில்லை. கருத்திலும் பதியவில்லை.

எல்லோரும் நல்லவராக கனவுதான் காணமுடியும். என் கனவும் அதுதான். கனவுலகம் விடுத்து நனவுலகம் வருவோம்.

உங்கள் மதிப்பீட்டில், அந்த பத்துப்பேரில் எத்தனைபேர் தேர்ச்சி பெற்றனர். சான்றாக வாழ்பவர் (Role Model) வழிகாட்டியாக வாழ்பவர், வாழ்விக்கவே வாழ்பவர் எத்தனை பேர்?

ஓரிருவராவது தேறினரா? இப்போது சொல்லுங்கள். மனிதவளம் விரயமாகிக் கொண்டிருக்கிறதா? மேம்படுத்தப்படுகின்றதா??

மனிதவள மேம்பாட்டிற்காகவே ஓர் வாரியம் அமைத்து, அமைச்சர், அதிகாரிகள் என ஒரு பரிவாரமே இயங்கிக் கொண்டிருக்கும்போது இதுபோன்று குறை காண்பதோ - மனக்குமுறுல் என்று முறையிடுவது சரியல்ல என நினைப்பவர் சிலர் இருப்பர்.

கழிவு நீர் சுத்திகரித்திடவும், மிக உயரமான புகை போக்கிகள் வழியே காற்றில் கலக்கப்படும் மாசுகளை களைந்திடவும், சுற்றுச்சூழல் காத்திடவும், விரயங்களினின்று செழுமை **(waste to wealth)** உருவாக்கிடவும், ஒரு வாரியம் - மாசு - தூசு கட்டுப்பாடு வாரியம். ஒரு அமைச்சகம், சுற்றுச்சூழல் அமைச்சகம்.

தனியொருவன் தனது மனவளத்தைப் பெருக்கிடவோ, திருத்திடவோ முயற்சியே மேற்கொள்ளாதபோது, எத்தனை வாரியங்கள் அமைத்திட்டாலும் அவைகளும் விரயங்களை நோக்கித்தான் விரையும்.

மக்கள் தொகை பெருக்கம் மனிதவளத்தின் செழிப்பிற்கல்லவா உதவியிருக்கவேண்டும்.

**என்றுமோர் நிலையாய் என்றுமோர் இயலாய்
என்றும் உள் எதுவாம் என்தனிச் சத்தே (1202)**

விரயங்கள் சிலவற்றையேனும் அடையாளப்படுத்தி விமர்சித்திட, விளக்கிட, விரும்புகிறேன். ஏற்பதும், தொடர்ந்து சிந்தித்து, சீராய்வு செய்வதும், எனது கருத்தினை மறுப்பதும் – என்னை திருத்துவதும் உங்கள் பொறுப்பு, விரயங்களை வகைப்படுத்தி விளக்க முனையுங்கால், மிகுந்த எச்சரிக்கையும், பொறுப்புணர்வும் தேவை,

பல நூற்றாண்டுகளாக பாரம்பரிய பழக்கங்கள், பண்டிகைகள், சடங்குகள், ஏன் செய்கிறோம் என்று தெரியாமலே, மிகுந்த சிரத்தையோடு செய்யப்பட்டு வருகின்றன. இவை எல்லா மதத்தாருக்கும் பொருந்தும். இவைகளை ஆய்வு செய்தலே அபசாரம் என்போர் இருக்கின்றனர்.

எங்கள் பாரம்பரிய கலாச்சாரம் காப்பாற்றப்படவேண்டும் என்று கிளர்ந்தெழுவோரும் உள்ளனர்.

நடுநிலை சிந்தனையாளர்கள், மிகக் குறைவாக இருப்பது மட்டுமின்றி எண்ணங்களை பரிமாறிக் கொள்ளக்கூட தயங்குகின்றனர்.

விரயங்களின் எண்ணிக்கை பெருக்கம் பற்றி, சமுதாய நலனில் அக்கறையுள்ள அறிவுஜீவிகள் ஆய்வு செய்யவேண்டிய அவசரநிலை உருவாகிவிட்டது. விரயம் தவிர்த்தலை ஒரு தவமாக – விரதமாக மேற்கொள்ளுமாறு பணிவுடன் விண்ணப்பிக்கின்றேன்.

அனைத்து மதத்தினரும் தங்கள் மதப்பற்று தங்கள் மதச் சிறப்பு – தங்கள் கோட்பாடுகளின் தனித்துவம் இவை அனைத்திற்கும் பங்கம் வராமல் தாங்கள் கடைப்பிடிக்கிற சம்பிரதாயங்கள் – கொண்டாடி மகிழ்கிற பண்டிகைகள் – திருவிழாக்கள் – செலுத்துகின்ற நேர்த்திக் கடன்கள் – வானவீதியை ஜொலிக்க வைத்திடும் வாணவேடிக்கைகள் – காற்றின் தூய்மையை மாசுபடுத்தும் பட்டாசு வெடிகள் இன்னும் பல. ஒவ்வொன்றாக ஆய்வு செய்ய முன்வரவேண்டும்.

நீங்கள் சார்ந்துள்ள மதங்களின் கோட்பாடுகளை முழுமையாக அறிந்துள்ளீர்களா? அவைகள் தான் உங்கள் மனவளத்தின் செழிப்பிற்கு உதவுவதாகவோ – அவைகளின் வழிகாட்டுதலில் தான் வாழ்க்கைப் பயணம் வெற்றிகரமாக தொடர்கிறது என்றோ உண்மையாகவே உணர்கிறீர்களா? திறந்த மனதுடன், பற்றற்ற உணர்வோடு சிந்தித்து விடை காணுங்கள்.

கடந்த 50 ஆண்டுகளாக நாம் அதிக அளவில் விவாதிப்பது ஊழல் பற்றிய செய்திகளைத்தான். ஊழல் என்பது உழைப்பின்றி பெறுகின்ற வருமானம் – வெகுமானம். சரிதானே ! நம்மில் சிலரை பரம்பரை பணக்காரர்களாகவும், பாரம்பரிய பெருந்தனக்காரர்களாகவும், கொஞ்சம் கூட கிலேசமில்லாமல் தொழுது ஏத்திய வண்ணம் இருக்கிறோம். இவர்கட்கெல்லாம் ஐநூறு ஏக்கர், ஆயிரம் ஏக்கர் என்று சொத்து இருப்பதாக அறிகிறோமே, இவர்கள் அந்தக் காலத்தில் மிகக் கடுமையாக உழைத்து இவ்வளவு சொத்துக்கு சொந்தக்காரர்களாயிருப்பரா?

ஆங்கிலேயன் எப்படி இந்த நாட்டையே அபகரித்து, நம்மையெல்லாம் அடிமையாக்கி ஆண்டானோ அதற்கும் பல நூற்றாண்டுகட்கு முன்னரே மன்னர்கள் பரம்பரையும், குறுநில மன்னர்கள் தங்கள் வீரதீரச் செயல்களால் பெரும் நிலப்பரப்புகளை ஆக்கிரமிப்பதும், அவர்களை அண்டி பிழைக்கும் சாமார்த்தியசாலிகள் தங்களுக்கு வேண்டியவற்றை பெற்றுக் கொள்வது பரவலாக உழைப்பாளிகளின் உழைப்பு சுரண்டப்பட்டது, இதற்கு மதங்களும் – மதகுருக்களும் பெரிதும் துணைநின்றனர். அவர்கள் ஆற்றிய பங்கு மறுக்க இயலாது.

ஒரு நாட்டின் பொருளாதாரம் – உழைப்பு – உற்பத்தி – பணம் – பகிர்வு.

இன்று உழைப்பில் ஒழுங்கில்லை. உற்பத்தி பெருகவில்லை. பணம் மதிப்பிழந்து வீங்கித் திணறுகிறது. பகிர்தலில் நேர்மை இல்லை. மனிதவளம் விரயமாகிறதா? செழித்து ஓங்குகிறதா சொல்லுங்கள்.

உழைப்பதற்கென்றே பிறப்பிக்கபட்ட ஒரு சாரார். உண்டு களிப்பதற்கே பிறிதொரு வகுப்பினர் என்ற நம்பிக்கையோடு வாழ்ந்திருந்த காலம் ஒன்று இருந்தது. ஆனால் இன்றும் அந்த நிலை தொடர்வது மனிதவள விரயமா? மனிதவள மேம்பாடு இதுவல்ல.

**அனைத்துலகு அவைகளும் ஆங்காங்கு உணரினும்**
**இனைத்தென அறியா என்தனிச் சத்தே (1204)**

தீவிரவாதம் எனும் ஒருதேவையற்ற விரயம் அண்மைக் காலங்களில் உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.

வன்முறைகளை வருமுன்னர் காத்தலில் வெற்றி கண்டோமா? வந்தபின் வருந்தி பாடம் கற்றோமா? வராமலே காத்திட என்ன செய்தோம்? மனவளம் மேம்படுகிறது என்று திருப்தியடைவீர்களா? விரயமாகிறதே என வருந்துவீர்களா?

ஊழலும், விரயமும் கைகோர்த்து பெருமித உலா வந்து கொண்டிருக்கிறது. மக்கள், இந்த தேரோட்டத்தில் உற்சாகமாக வடம் பிடித்து இழுத்துக் கொண்டி-ருக்கிறார்கள்.

கையூட்டு பெறாமல் கடமை ஆற்றிடும் ஒரே ஒரு துறை உண்டா?? நெஞ்சு பொறுக்குதில்லையே என நினைக்கக்கூட அஞ்சி, இதுதான் இன்றைய தர்மம் என வாய்பொத்தி ஒதுங்கி வாழ்பவர்கள் ஒரு சாரார். என் கடன் பணி செய்து கிடப்பதே என்று ஒரு சிலர் இன்னமும் இந்த உலகை உயிர்ப்போடு இருந்திட உதவிக் கொண்டிருக்கிறார்கள்.

கைத்தொலைபேசி ஒரு ஆக்கபூர்வமான அற்புதக் கண்டுபிடிப்பு. ஆக்கபூர்வ பயன்பாட்டைத் தாண்டி இன்றைய வக்கிர புத்திசாலிகளின் செயற்பாடுகளை விவரித்தலே பெரும் விரயம்.

ஊழல் என்கிற ஒரு விரயம் தவிர்க்கப்பட்டாலே விலைவாசிகள் 40 சதவிகிதம் குறையும் என்கிறார் முன்னாள் ஊழல் தடுப்புத்துறை இயக்குன்ர திரு. விட்டல்.

பிறிதோர் பொருளாதார நிபுணர், அரசுத்துறை ஊழியர்களும், அதிகாரிகளும் முழுமையாக எட்டு மணிநேரம் ஊழியம் செய்தாலே பணவீக்கம் பெருமளவு குறையும் என்று சொல்கிறார். ஆடம்பர விருந்துகளில் 30 சதவிகித உணவுப் பண்டங்கள் வீணாக்கப்படுவது இன்னுமொரு புள்ளிவிவரம்.

ஒரே நாளில் 10 ஆயிரம் கோடி ரூபாய் பட்டாசுகள் வெடித்து மகிழ்கிறோம் என்பதும் அதிகாரபூர்வமான புள்ளி விவரம்தான்.

அண்மைக்கால விரயங்களில் முதன்மை வகிப்பது பொன்னாடை. ஒரு வினாடிகூட உங்கள் தோள்களில் தங்காத பொன்னாடை போர்த்துபவரை மகிழ்விக்கிறதா? போர்த்திக் கொள்பவரை பூரிப்படையச் செய்கிறதா? என்ன ஆகிறது அத்தனை ஆயிரம் பொன்னாடைகளும்!

விரயங்கள் தவிர்க்கட்டால் என்ன பெறலாம். மனிதவள மேம்பாடு!

விரயங்களை அடையாளம் காணத் துவங்கினாலே போதும்.

அடையாளம் காணப்பட்ட விரயம் அகற்றப்பட்டாலோ – திருத்தி அமைக்கப்பட்டாலோ, முதல் வெற்றியாக, அமைதி நிலவும். ஏற்றத்தாழ்வுகள் அகலும். வன்முறைகள் குறையும் – மறையும். ஊழல் அறவே அகலும். அபரிமித சொத்துக் குவிப்பு குறைந்து எல்லார்க்கும் எல்லாம் எனும் இடம் நோக்கி விரையும் இந்த வையம்.

துல்லிய தாக்குதலில் தேர்ந்துவிட்டோம். ஆனால் அத்தனை மதங்களும் போதித்த அன்பெனும் ஆயுதத்தை முற்றிலுமாக புறக்கணித்துவிட்டோமே,

தீர்வுதான் என்ன? மனிதநேயம். திருத்திடத்தான் இயலவில்லை. திருந்திடவாவது முயல்வோமே! ஓர் எளிய சூத்திரம் சொல்லி நிறைவு செய்கிறேன். கற்றது கைம்மண்ணளவு : கல்லாதது உலகளவு : கற்றதினின்று அடியேன் பெற்றதை சமர்ப்பிக்கின்றேன்.

1, நல்லவனாக இரு : இயலுமா? இயலும். எப்படி? அனைவரையும் நேசித்தல் – (சமநோக்கு) அழுக்காறு அகற்றல். அமைதி காத்தல்.

2. விரும்பத்தக்கவனாக இரு : இயலுமா? இயலும். எப்படி? குற்றங்காணல் தவிர்த்திடு. குறை சொல்லல் மறந்திடு. கோபங்கொள்ளல் கைவிடு.

3, உபயோகமானவனாக இரு : இயலுமா? இயலும். எப்படி??? இயன்றளவு பொருளுதவி. இயன்றளவு உடலுழைப்பு, எப்போதும் இன்னுரை, நிச்சயமாக இவை உங்களால் முடியும். விரயம் தவிர்ப்போம். விவேகமாக வாழ்வோம். மனவளம் செழிக்கட்டும். மனிதநேயம் மலரட்டும்.



**இலட்சுமணசாமி**
இராணிப்பேட்டை
08056438488

**பொதுமறை முடிகளும் புகலவை முடிகளும்**
**இதுஎனற்கு அரிதாம் என்தனிச் சத்தே (1206)**